1986 மே 13] [பேரவைத் தலைவர்]

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4—30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு 1986 (மே. செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1986) ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் எதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உஉ) வேளாண் விளைப் பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இந்த அவையில் எத்தனையாவது தடவை கொண்டுவருகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நிறைவு ஏற்படும்போது அவற்றை அரசாங்கம் கலைத்துவிட்டு எடுத்துக் கொள்வது, சூப்பர்ஸெஷன் என்ற நடவடிக்கை தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இங்கே கொடுத்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலமாக

** 1986 ஆம் ஆணடு மே 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.